**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.34/2024 – PW- 7**

| | |
|---|---|
| Name | திரு. இராமசாமி |
| Husband/Father Name | கண்ணப்பன் |
| Village /Area | அய்பேடு கீழ்மோட்டூர் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 67 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.12.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த ஆறுமுகம் எனது உடன் பிறந்த தம்பி ஆவார். அசா.1 என்னுடைய தம்பி மனைவி ஆவார். ஆஜர் எதிரி குமார் எனக்கு மாமன் உறவு முறை. கடந்த 2019-ம் ஆண்டு நான் மருத்துவமனையில் இருந்து அன்று மாலை வீட்டிற்கு வந்தேன். அப்போது என் தம்பி ஆறுமுகம் கொலை செய்து இறந்து விட்டதாக ஊர் மக்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி தான் என் தம்பியை கொலை செய்ததாக கேள்விப்பட்டேன். என் தம்பியின் இறப்பிற்கு நான் சென்றேன். என் தம்பியை நான் பார்த்த போது அவரின் வலது பக்க நெற்றியில் இரத்த காயம் இருந்தது. என் தம்பிக்கு சொந்தமான நிலத்தில் இருந்த கொட்டகையில் அவர் இறந்து கிடந்தார் அங்கு இரத்தம் உறைந்து இருந்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.12.18 16:34:54 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.